சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

| | | | |
|---|---|---|---|
| வா.சா. | 2 | நாள் | :09.01.2025 |
| அசல் வழக்கு எண். | 4/2022 | | |
| பெயர் | முகமது இஸ்மாயில் | த/பெ | ஜமால் மைதீன் |
| வயது | 54/25 | தொழில் | ரியல் எஸ்டேட் |
| ஜாதி | முஸ்லிம் | மதம் | இஸ்லாம் |
| கிராமம் | மயிலாடுதுறை உள்ளூர் | தாலூக்கா | மயிலாடுதுறை |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழிசெய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு சாட்சி ஆவேன். முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதிலுள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவைதான்.

**1 முதல் 6 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் பிரதிவாதியை நான்கு தெரியும் என்று சொல்லியிருக்கிறேன் என்றாலும் அவர் பிறந்த தேதி தெரியுமா என்றால் தெரியாது. இறந்த தேதி தெரியுமா என்றால் 6ம் மாதம் 2024 என்பது மட்டும் நினைவில் உள்ளது. தேதி நினைவில்லை. அவர் உடல்நலம் சரியில்லாமல் இருந்தார் என்றாலும் அவருக்கு என்ன நோய் என்றால் அவருக்கு Sugar இருந்தது. நான் 1991 முதல் 2000 ஆம் ஆண்டுவரை துபாயில் வேலை பார்த்தேன். 1ம் பிரதிவாதியை முதன்முதலில் எங்கு பார்த்தேன் என்றால் மயிலாடுதுறையில். எனக்கு சின்ன வயதாக இருந்தபோது அவர் சைக்கிள் கடை வைத்திருந்தார். அது முதல் தெரியும். அபிடவிட் பாரா 3 ல் நான் 1ம் பிரதிவாதியை அடிக்கடி பார்த்து பேசுவேன் என்று சொல்லியுள்ளேன் என்றாலும் அது எப்படி என்றால் மாதம் ஒரு முறை வெள்ளிக்கிழமை அல்லது வாரம் ஒரு முறை வெள்ளிக்கிழமை பார்த்து பேசுவேன். அபிடவிட் பாரா 3 ல் சொத்துக்களை வாங்குவதற்கான பணம் அனுப்பிய விவரங்களை யார் என்னிடம் கூறினார் என்று சொல்லியுள்ளது யாரை பற்றியது என்றால் 1ம் பிரதிவாதி கணேசன் என்னிடம் சொன்னார் அதைதான் சொல்லியிருக்கிறேன். எந்த சொத்தை வாங்குவதற்காக எவ்வளவு பணம் அனுப்பியதாக சொன்னாரா என்றால் அதை

J.m இஸ்மாயில்.

சொல்லவில்லை. கணேசன் எனக்கு கடன் கொடுத்திருக்கிறாரா என்றால் இல்லை. அபிடவிட் 4ம் பாராவில் 1ம் பிரதிவாதியின் கடைசி காலம் வரை அவரை போய் பார்த்ததாக சொல்லியுள்ளேன் என்றாலும்அதற்கு என்ன அர்த்தம் என்றால் அவர் உடல்நலம் சரியில்லாமல் இருப்பதாக கேள்விப்பட்டு போய் பார்த்தேன். அதன்பிறகு 10 நாட்களில் அவர் இறந்துவிட்டார். அதை தான் சொல்லியுள்ளேன். கடைசியாக அவரை எங்கு பார்தேன் என்றால் அவர் வீட்டில் பார்த்தேன். தேதி தெரியுமா என்றால் நினைவில்லை. அப்படி பார்க்கும் போது யார் யார் இருந்தார்கள் என்றால் 2,3 லேடீஸ் இருந்தார்கள். அவர்கள் யார் என்று எனக்கு தெரியவில்லை. கணேசன் மனைவி பெயர் என்ன என்றால் எனக்கு தெரியாது. கணேசனின் இறுதி சடங்கு எந்த இடத்தில் எத்தனை மணிக்கு நடந்தது என்றால் மதியம் 2.00 மணிக்கு அவர் வீட்டில் நடந்தது தேதி நினைவில்லை. சகோதரரர்களுக்கிடைய என்ன குடும்ப பிரச்சனை இருந்தது என்றால் சொத்து தொடர்பான பிரச்சனை இருந்தது. வாதி சீத்தாராமன் துபாயில் இருந்து அனுப்பிய பணத்தை வைத்து தான் சொத்து வாங்கிய விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் கணேசன் சொல்லிதான் தெரியும். அவரிடம் சொத்து எப்படி வாங்குகிறீர்கள் லாட்டரி எதுவும் விழுந்ததா என்று கேட்டேன் அதற்கு அவர் சின்னப்பையன் சீத்தாராமன் அனுப்பிய பணத்தில் வாங்குவதாக சொன்னார். அது உண்மை என்று எப்படி தெரியும் என்றால் கணேசன் சொன்னதால் அது உண்மை என்று சொன்னேன். ரகு மூன்று குழந்தைகள் மற்றும் மனைவியுடன் துபாயில் இருந்தார் அவருக்கு எவ்வளவு செலவாகும் என்று தெரியும் மேலும் கணேசன் தனது சின்னமகன் பணம் அனுப்பி சொத்து வாங்குவதாக சொன்னார். வாதி சீத்தாரமனின் அண்ணனை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சொத்துக்கள் யார் யார் பெயரில் வாங்கப்பட்டது என்று தெரியுமா என்றால் தன் பெயரிலும் மனைவி பெயரிலும் உடல்நலம் சரியில்லாமல் இருந்த மகன் (முத்துராமன்) பெயரிலும், தனது மகள் பெயரிலும் வாங்கியதாக கணேசன் சொன்னார். தாவா சொத்துக்கள் யாரிடமிருந்து எந்த தேதியில் எவ்வளவு தொகை கொடுத்து யாரால் வாங்கப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எல்லா சொத்தையும் தன் அண்ணன் பெயரில் எழுதிக்கொண்டதாகவும் அதற்காக வழக்கு தாக்கல் செய்ததாகவும்

Sd/- J.M. [signature]

சொன்னார். நான் சொல்லும் பதில்கள் பொதுவான பதில்களாக உள்ளது என்றாலும் குறிப்பான பதில்களாக இல்லை என்றாலும் அதனால் வழக்கின் சங்கதிகள் எதுவும் எனக்கு தெரியாது என்றாலும் எனக்கு சொல்லிக்கொடுத்து அழைத்து வந்து அதனடிப்படையில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 5 வேளை தொழுகை நடத்தும் முஸ்லீம் பொய் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. என்னை சாட்சி சொல்வதற்கு யார் இன்று அழைத்து வந்தார்கள் என்றால் சீத்தாராமன் சாட்சி சொல்லவரும்படி சொன்னார் அதனால் வந்தேன்.

S.M இஸ்மாயில்.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

9/1/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

09/1/25